**// தேர்வுகள் / தனிக்கவனம் //** **மிக முக்கியம்**

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
நக.எண். 0126/ஆ4 /2022 நாள். 08.02.2022

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – முதல் திருப்புதல் தேர்வு– பிப்ரவரி – 2022 – அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் – 10 மற்றும் 12–ஆம் வகுப்பு வினாத்தாட்கள் பெறுதல் / விடைத்தாள் கட்டுகள் ஒப்படைப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான கட்டுக்களை பெற்றுக்கொள்ளுதல் – மதிப்பீடு மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பெண் பட்டியல் ஒப்படைத்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை 1 சென்னை–06, பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 020931/பிடி2/இ1/2021 நாள்–12.11.2021
2 சென்னை–06, அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 026826/எச்1/2021 நாள்–31.01.2022

-----

பார்வை 1 மற்றும் 2ல் காணும் செயல்முறை ஆணையின்படி அரசுத் தேர்வுத்துறை மூலம் 10 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு திருப்புதல் தேர்வு –1 மாநிலப் பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு 09.02.2022 முதல் 16.02.2022 வரை நடைபெற உள்ளது. வினாத்தாட்கள் பெறுதல் , விடைத்தாட்கள் ஒப்படைத்தல், மதிப்பீட்டு மேற்கொள்ளுதல், மதிப்பெண் பட்டியல்களை ஒப்படைத்தல் போன்ற வழிமுறைகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுமாறும், இத்தேர்விற்கு மாணவர்களை தயார்படுத்துதல் மற்றும் தேர்வை சிறப்பாக நடத்துவதற்கான அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளை (SOP) பின்பற்றுதல் சார்பான அறிவுரைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

1. முதல் திருப்புதல் தேர்வு வினாத்தாள் அரசுத் தேர்வுத் துறையால் வடிவமைக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே 10 மற்றும் 12–ஆம் வகுப்புத் தேர்வுகள் நடைபெற இருக்கிறது. எனவே, மிகுந்த கவனத்துடன் தேர்வுகள் நடத்தவேண்டும்.
2. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எழுதும் விடைத்தாளில் **பள்ளியின் எவ்வித முத்திரையையும் பதிக்கக்கூடாது.** மாணவர்கள் அவரது பெயரையோ, பள்ளியின் பெயரையோ விடைத்தாளின் எந்தப் பக்கத்திலும் எழுதக்கூடாது. விடைத்தாட்களை கட்ட வெள்ளை நூலினை மட்டுமே வழங்கவேண்டும்.
3. அனைத்து பள்ளிகளிலும் **10–ஆம் வகுப்பு எனில் தேர்வு எண்கள் 10001 இல் தொடங்கி தொடர்ச்சியாக** அனைத்து மாணவர்களுக்கும் (உதாரணமாக பள்ளியில் மொத்தமாக 10 வகுப்பில் 150 மாணவர்கள் இருப்பின் தேர்வு எண் 10001 இல் தொடங்கி 10150 வரை) வழங்கவேண்டும்.
4. இதேபோல் **12 –ஆம் வகுப்பு எனில் தேர்வு எண்கள் 12001 இல் தொடங்கி தொடர்ச்சியாக** அனைத்து பிரிவு மாணவர்களுக்கும் (உதாரணமாக பள்ளியில் 12 வகுப்பில் அனைத்து பிரிவுகளிலும் சேர்த்து மொத்தமாக 200 மாணவர்கள் இருப்பின் தேர்வு எண் 12001 இல் தொடங்கி 12200 வரை) வழங்கவேண்டும்.

5. 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்கள் ஆண்டு பொதுத் தேர்வைப்போல வகுப்பறைக்கு 20 மாணவர்கள் வீதம் அமர்ந்து தேர்வு எழுதும் வகையில் தேர்வு அறைகளை அமைக்கவேண்டும்.

6. 10–ஆம் வகுப்பு மாணவர்கள் காலை 10 மணி முதல் 1.00 மணி வரை, 12–ஆம் வகுப்பு மாணவர்கள் மதியம் 2.00 மணி முதல் 5.00 மணி வரை கட்டாயம் தேர்வறையில் தேர்வு எழுவேண்டும். எக்காரணம் கொண்டும் தேர்வு நேரம் முடியும் முன்னர் மாணவர்களிடம் விடைத்தாட்களை பெறக்கூடாது.

7. 10 மற்றும் 12–ஆம் வகுப்பு விடைத்தாட்களை மட்டும் பாடவாரியாக மொழிவாரியாக (தமிழ் ஆங்கிலம் தவிர) ஒவ்வொரு 50 தேர்வு எண்கள் வரையிலான விடைத்தாட்களையும் ஒரு கட்டாகவும் மீதி உள்ள விடைத்தாட்களை தனிக்கட்டாகவும் கட்டி சம்மந்தப்பட்ட விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் மாலை 5.45 மணிக்குள் கட்டாயம் ஒப்படைக்கப்பட வேண்டும். உதிரி விடைத்தாட்கள் 10 அல்லது அதற்கு குறைவாக இருப்பின் கடைசி 50 கட்டுடன் சேர்த்து வைத்து கட்டவும். மேலும் ஒவ்வொரு கட்டுகளுக்குள் இரண்டு மதிப்பெண் பட்டியல்கள் வைக்கப்பட வேண்டும்.

   **உதாரணமாக 12ம் வகுப்பில்**

   - **125 தேர்வர்கள் உள்ள போது , தேர்வு எண் 12001 முதல் 12050 வரை–1ம் கட்டு, 12051 முதல் 12100 வரை – 2ம் கட்டு, 12101 முதல் 12125 வரை – 3ம் கட்டு என தனித்தனிக் கட்டாக கட்டவேண்டும்**
   - **109 தேர்வர்கள் உள்ள போது தேர்வு எண் 12001 முதல் 12050 வரை–1ம் கட்டு, 12051 முதல் 12109 வரை – 2ம் கட்டு**
   - **111 தேர்வர்கள் உள்ள போது தேர்வு எண் 12001 முதல் 12050 வரை–1ம் கட்டு, 12051 முதல் 12100 வரை – 2ம் கட்டு, 12101 முதல் 12111 வரை – 3ம் கட்டு**
   - **60 தேர்வர்கள் வரை தேர்வு எண் 12001 முதல் 12060 வரை–1ம் கட்டு**
   - **61 தேர்வர்கள் உள்ள போது தேர்வு எண் 12001 முதல் 12050 வரை–1ம் கட்டு, 12051 முதல் 12061 வரை – 2ம் கட்டு**
   - **இதே முறையை பின்பற்றி 10 ஆம் வகுப்பு விடைத்தாட்களையும் கட்டவேண்டும்**

8. **உயிரியல் பாடத்தை பொறுத்தவரை** உயிரி தாவரயியல், உயிரி விலங்கியல் என தனித்தனியே பிரித்து கட்டாமல் **<u>ஒரே கட்டாகவே கட்டவேண்டும்.</u>**

9. விடைத்தாட்களை கட்டும்போது **கட்டின் மேலே எழுதப்பட்ட விவரம்** குறிப்பாக வகுப்பு, பாடம், ஆகியவற்றை **கட்டில் வைக்கப்படும் விடைத்தாளை ஒப்பிட்டு** சரிபார்த்து கட்டு கட்டவும்

10. **விடைத்தாட்களை கட்ட கட்டாயம் செய்திதாள்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.**

11. மதிப்பீட்டுக்காக மாற்றித்தரப்படும் விடைத்தாள்களை பெற்று கொண்டு, வழங்கப்படும் விடைக்குறிப்பின் அடிப்படையில் மட்டுமே விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

12. மதிப்பீட்டு பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அப்பணியினை சிறப்புக் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்த தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மேலும் உயர் அலுவலர்கள் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை ஆய்வு செய்யும்போது அதில் குறைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் மதிப்பீடு செய்த ஆசிரியரின் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

13. ஒவ்வொரு நாளும் தேர்வுகள் முடிந்தவுடன் விடைத்தாள் கட்டுகளை மதிப்பீடு செய்வதற்காக விடைத்தாள் சேகரிப்பு மற்றும் பகிர்வு மையத்தில் ஒப்படைத்து தங்களுக்கான விடைத்தாள் கட்டுக்களை பெற்றுச் செல்லவும்.

14. திருத்தப்பட்ட விடைத்தாட்களை தங்கள் பள்ளியிலேயே பாதுகாப்பாக வைத்துக்கொண்டு இரண்டு மதிப்பெண் பட்டியலினை மட்டும் தனித்தனியாக உறையில் பகிர்வு மையத்திலே உடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.
15. எனவே அனைத்து தலைமையாசிரியர்களும் தேர்வினை நன்முறையில் நடத்தி மாணவர்கள் கற்றல் திறன் அறிந்து அதற்கேற்ப பயிற்சியளித்து நமது மாவட்டத்தின் தேர்ச்சி விழுக்காட்டினை உயர்த்த ஆசிரியர்களுடன் இணைந்து பாடுபட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## வினாத்தாட்கள் பெறும் முறை

தங்கள் பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒன்றியத்திலுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்தில் தேர்வுகள் நடைபெறும் நாள் அன்று காலை பள்ளி தலைமை ஆசிரியரின் முகப்புக் கடிதத்துடன் தனி நபர் மூலம் வினாத்தாட்கள் பெற்று பள்ளிக்கு பாதுகாப்பாக எடுத்து சென்று தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். தேர்வுகள் நடைபெறும் நாளுக்குண்டான பாட வினாத்தாட்கள் மட்டுமே பெறப்படவேண்டும். மொத்தமாக அனைத்து நாட்களுக்குண்டான வினாத்தாட்கள் பெறப்படகூடாது.

### தேர்வு அறையில் ஒதுக்கீடு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை

தேர்வு அறையில் ஒவ்வொன்றிலும் 20 மாணவர்களுக்கு மிகாமல் சமூக இடைவெளியினை பின்பற்றி மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். தேர்தல் பயிற்சி வகுப்பிற்கு ஆசிரியர்கள் சென்றிருந்தால் அருகிலுள்ள பள்ளிகளிலிருந்து தேர்தல் பயிற்சி வகுப்பிற்கு செல்லாத ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்களை அறைக் கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் செயல்படுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

### விடைத்தாட்கள் ஒப்படைக்கும் இடம்

1. **வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி வேலூர், வேலூர் மாவட்டம்**

## முதல் திருப்புதல் தேர்வு பிப்ரவரி 2022

### தேர்வு நடைமுறை சார்ந்த சுற்றறிக்கை

முதல் திருப்புதல் தேர்விற்கு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் விடைத்தாளில் பள்ளியின் எவ்வித முத்திரையையும் பதிக்கக்கூடாது.

மாணவர்கள் விடைத்தாளின் முன்பக்கத்தில் கீழ்க்கண்ட விவரங்களை மட்டுமே எழுதவேண்டும்

| முதல் திருப்புதல் தேர்வு பிப்ரவரி 2022 | |
|---|---|
| தேர்வு எண் | : |
| வகுப்பு | : |
| பிரிவு | : |
| பாடம் | : |
| பயிற்று மொழி | : |
| தேர்வு நாள் | : |

மேற்கண்ட விவரத்தை (வகுப்பில் கரும்பலகையில் எழுதி வைத்து அதனைப் பார்த்து) மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும்.

**<u>தேர்வு எண் வழங்குதல்</u>**

ஒவ்வொரு பள்ளியும் கீழ்க்கண்ட முறையை பின்பற்றவும்

12 ம் வகுப்பிற்கு : 12001 முதல் தொடர்ச்சியாக தேர்வு எண் வழங்க வேண்டும் (பிரிவு, தொகுதி வேறுபாடு பாராமல் – தொகுதிக் குறியீடு வரிசையில்)

எடுத்துக்காட்டாக 2502 பாடப்பிரிவில் 35 மாணவர்கள் – 12001 முதல் 12035

2503 பாடப்பிரிவில் 30 மாணவர்கள் – 12036 முதல் 12065

2608 பாடப்பிரிவில் 40 மாணவர்கள் – 12066 முதல் 12105

2704 பாடப்பிரிவில் 20 மாணவர்கள் – 12106 முதல் 12125

மொத்த மாணவர்கள் – 125 தேர்வு எண்கள் 12001 முதல் 12125 வரை

( இதேபோல் 10 ஆம் வகுப்புகளுக்கும் வழங்கவும் )

**விடைத்தாட்கள் ஒப்படைக்கும் முறை**

தேர்வு விடைத்தாட்களை ஒவ்வொரு பாடத்தையும் பயிற்று மொழி வாரியாக 50 விடைத்தாட்கள் வீதம் ஒரு உறையில் தனித் தனியாக வைக்கப்பட்டு 50க்கு குறைவாக உள்ள விடைத்தாட்களை கடைசி உறையிலும், உறையின் மீது 1 / 3, 2 / 3, 3 / 3 என குறிப்பிட்டு சீலிடப்பட்டு பிறகு மொத்த கவரினையும் செய்தித்தாள் மூலம் கட்டி ஒப்படைக்கப்பட வேண்டும்.

**உயிரியல் பாடத்தை பொறுத்தவரை** உயிரி–தாவரயியல், உயிரி–விலங்கியல் என தனித்தனியே பிரித்து கட்டாமல் **<u>ஒரே கட்டாகவே கட்டவேண்டும்.</u>**

பின்பு பாடவாரியாக அனைத்துகட்டுகளையும், ஒரு பாடத்தில் 3 கட்டுகள் இருப்பின் மூன்றையும் சேர்த்து ஒரு பண்டலாக கட்டவும். கட்டுகளை கட்டுவதற்கு செய்தித்தாளை பயன்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

முதல் திருப்புதல் தேர்வுகள் கால அட்டவணையின்படி உரிய நேரத்தில் கண்டிப்பாக எந்தவித மாற்றமும் இல்லாமல் தேர்வு நடத்தப்பட வேண்டும் என அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தங்கள் பள்ளிகளில் பணிபுரியும் பாடம் வாரியாக முதுகலை ஆசிரியர்கள் விவரம் மற்றும் பாடம் வாரியாக பட்டதாரி ஆசிரியர்கள் விவரம் இணைப்பில் காணும் படிவத்தில் பூர்த்தி செய்து முதல் நாள் விடைத்தாட்கள் ஒப்படைக்கும் மையத்திலேயே தனி உறையில் ஒப்படைக்கப்பட வேண்டும் என அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதல் திருப்புதல் தேர்வு சார்பான விவரங்கள் தெரிந்துக்கெள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்களின் அலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அலைபேசி எண் 9486273764 / 9442193441

**இணைப்பு–** தேர்வு சார்பான சுற்றிக்கை மற்றும்
மாதிரி படிவங்கள்

(ஒப்பம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

**பெறுநர்**
அனைத்து வகைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்/ மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

**நகல்**
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

## வேலூர் மாவட்டம்

10 / 12 ஆம் வகுப்பு முதல் திருப்புதல் தேர்வு – பிப்ரவரி 2022
விடைத்தாள் கட்டுகள்ஒப்படைப்பு விவரம்

பள்ளியின் பெயர் :

கல்வி மாவட்ட எண் மற்றும் பெயர்:

தேர்வு நாள் :

தலைமை யாசிரியர் கைபேசி எண்:

| வ எண் | பாடம் | பயிற்று மொழி (முதன்மைப்பாடம் மட்டும்) | தேர்வு எண் முதல் – வரை | மொத்த விடைத்தாள்கள் | மொத்த உறைகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தலைமை யாசிரியர் கையொப்பம்

(குறிப்பு: இப்படிவம் அனைத்து பாடங்களுக்கும் பொதுவானது. வகுப்பு வாரியாக தனித்தனி படிவம் தயார் செய்து ஒப்படைக்க வேண்டும். விடைத்தாட்களை ஒப்படைக்கும் போது கொடுக்கவும்)

<table>
<tr><td colspan="3">தேர்வு எண்: முதல் வரை மொத்த விடைத்தாட்கள்:</td></tr>
<tr><td colspan="3">வருகை புரிந்தோர் எண்ணிக்கை: வருகை புரியாதோர் எண்ணிக்கை:<br>(தேர்வு எண் குறிப்பிடவும்)</td></tr>
<tr><td colspan="3">முதல் திருப்புதல் தேர்வு பிப்ரவரி 2022 – விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி</td></tr>
<tr><td>பாடம்</td><td colspan="2"></td></tr>
<tr><td>பயிற்று மொழி</td><td>T / E</td><td>வகுப்பு : 10 / 12</td></tr>
<tr><td colspan="3"></td></tr>
<tr><td>மந்தன கட்டு எண்</td><td colspan="2"></td></tr>
<tr><td colspan="3"></td></tr>
<tr><td colspan="3">தேர்வாளர் பணிபுரியும் பள்ளி :</td></tr>
<tr><td colspan="3">குறிப்பு: 1. விடைத்தாள் கட்டுகளை இப்படிவம் சேதமடையாவகையில் இருக்க வேண்டும்<br>2.விடைத்தாள் கட்டுகளைப் பிரித்தவுடன் விடைத்தாட்களின் எண்ணிக்கையை சரிபார்க்கவும்<br>4. ஒவ்வொரு விடைத்தாளிலும் மதிப்பெண் பட்டியலிலும் கட்டின் மீதும் கட்டு எண்ணை தவறாமல் குறிப்பிட வேண்டும்.<br>5. மாணவர்கள் நலன் கருதி விடைக் குறிப்பின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவும், மதிப்பெண்களை கூட்டும் போது கவனமாக செயல்படவும்.<br>6. மதிப்பெண் பட்டியல் 2 நகல். தயார் செய்யப்பட வேண்டும்</td></tr>
</table>

**குறிப்பு : மந்தன கட்டு எண் , தேர்வாளர் பணிபுரியும் பள்ளி ஆகியவற்றை நிரப்பக்கூடாது.**